// மிக மிக அவசரம் // // தனிகவனம் //

வேலூர், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்.

ந.க.எண்.3071/அ1/2024 நாள். .08.2024.

| | |
|---|---|
| பொருள் | தமிழ்நாடு அமைச்சுப் பணி – பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் 15.03.2024 நிலவரப்படி அலுவலக உதவியாளர்/ பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராகப் பணிமாறுதல் மூலம் நியமனம் குறித்து முன்னுரிமை பட்டியல் – வெளியிடுதல் – சார்பு |
| பார்வை | 1.அரசாணை (நிலை)எண்.151 பள்ளிக் கல்வி (வரவு – செலவு) துறை நாள்.09.09.2024<br>2.அரசாணை (நிலை)எண்.33 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.06.09.2018<br>3.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.30000/அ4/இ1/2024 நாள்.25.07.2024 |

#######

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ளபடி அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்க 15.03.2024 நிலவரப்படி முன்னுரிமை பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

பட்டியலில் இடம் பெற்றுள்ள பணியாளர்கள் எவர் மீதும் 15.03.2024 முதல் நாளது தேதிவரை தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதியின் கீழ் வழக்கு நடவடிக்கை குற்றவியல் வழக்குகள் ஏதும் நிலுவையில் இருந்தாலோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு தண்டனை வழங்கப்பட்டு இருந்தாலோ அதன் விவரத்தினை உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

மேலும் 15.03.2024 நிலவரப்படி தகுதியுள்ள நபர்கள் எவரேனும் பெயர் விடுபட்டிருந்தால் அதன் விவரத்தினை நாளை மாலை 08.08.2024–க்குள் இவ்வலுவலகத்தில் நேரில் ஒப்படைக்க சார்ந்த அலுவலர்கள்/தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு.
முன்னுரிமை பெயர் பட்டியல்

// ஒப்பம் //
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர் – 9.

பெறுநர்

1.மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை / தொடக்க கல்வி / தனியர் பள்ளிகள்)

2. அரசு / நகராட்சி / உயர்நிலை / மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர்கள்
வேலூர் மாவட்டம்.